
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026
கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in


**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஜிகிட்டி நாவலில் கூத்துக் கலைஞர்களின் வாழ்வியல்

# *The Life Of The Artists In The Novel Jigiti*

**கட்டுரையாளர்:** த. சூர்யா, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-**642126**

*T. Surya, Full-time Ph.D. Scholar, Department of Tamil, Government Arts College, Udumalpet-642126*

*Dr. J. Sairabanu, Assistant Professor, Post Graduate & Tamil Advanced Research Department, Tamil Department,*

*Government Arts College, Udumalpet - 642126*

**நெறியாளர்: முனைவர் ஜ.சைராபானு, உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழ் உயராய்வுத்துறை, தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை - 642126.**

*Abstract*

*To examine the physical and mental pains of the Koothukhu artists. To explain the living conditions, income and professional insecurity of Koothu artists. To examine the identity crisis and social exclusion they face due to the decline of traditional arts. To expose the shortcomings of Koothu artists in basic needs such as education, health, and family life. The aim of this article is to understand the impacts of modern social changes (urbanization, media development) on their lives. The aim is to suggest solutions and protective measures to these problems.*

***Keywords** : Expressive acting , Performance skill , Dialogue delivery, Body language Musical coordination*

**ஆய்வுச்சுருக்கம்**

கூத்துக் கலைஞர்களின் உடல் மற்றும் மன உழைப்பால் ஏற்படும் வலிகளை ஆராய்தல். கூத்து கலைஞர்களின் வாழ்க்கை நிலை, வருமானம் மற்றும் தொழில்சார் பாதுகாப்பின்மையை விளக்குதல். பாரம்பரியக் கலைகளின் வீழ்ச்சி காரணமாக அவர்கள் சந்திக்கும் அடையாள நெருக்கடி மற்றும் சமூக புறக்கணிப்பை ஆய்வு செய்தல். கூத்து கலைஞர்களின் கல்வி, உடல்நலம், குடும்ப வாழ்வு போன்ற அடிப்படை தேவைகளில் உள்ள குறைபாடுகளை வெளிக்கொணருதல். நவீன சமூக மாற்றங்கள் (நகர்ப்புறமயமாக்கல், ஊடக வளர்ச்சி) இவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கங்களைப் புரிதல். இந்த சிக்கல்களுக்கு தீர்வுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன என்பதைக் கூறுதல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** அபிநயம் , நடிப்புத்திறன், வாக்குச்செயல், அங்கிகாபிநயம் , இசைஒத்துழைவு

**முன்னுரை**

தமிழ் நவீன இலக்கியத்தில் சமூக விளிம்பு நிலையிலுள்ள மக்களின் வாழ்வியலை ஆவணப்படுத்திய எழுத்தாளர்களில் கவிப்பித்தன் குறிப்பிடத்தக்கவர். அவரது நாவல்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை, தொழில், கலை, சாதி அடையாளம், பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியவற்றை யதார்த்த நயத்துடன் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, கூத்துக் கலைஞர்கள் கவிப்பித்தன் நாவல்களில் ஒரு முக்கிய சமூகக் குழுவாக சித்தரிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் நாட்டுப்புறக்கலை மரபுகளில் கூத்து ஒரு முக்கியமான கலை வடிவமாகத் திகழ்கிறது. சமூக நினைவுகள், வரலாறு, புராணங்கள், அரசியல், உணர்வுகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஊடகமாகக் கூத்து செயல்பட்டுள்ளது. கூத்தின் வளர்ச்சிதான் நாடகம். அவை அரங்கம் எதுவுமில்லாமல் கிராமங்களில் திறந்த வெளிகளில் நடத்தப்படுபவதுண்டு. கூத்துக்கலையை நிகழ்த்தும் கலைஞர்களின் வாழ்வானது சமூகஅமைப்பு, அடையாளம் ஆகியவை நீண்டகாலமாகவே அடக்குமுறைக்குள் சிக்கியுள்ளது. இதனை வெளிக்கொணரும் வகையில் ஜிகிட்டி நாவலில் கூத்துக் கலைஞர்களின் வாழ்க்கை, சமூகநிலை, பொருளாதாரம் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளை இக்கட்டுரை ஆய்வு செய்வதாக அமைகின்றது.

**கூத்துக் கலை வடிவம்**

கூத்து என்பது தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளில் முக்கியமானது. இந்த நாடகக்கலை மக்கள் நெஞ்சங்களில் இயல்பாகவே பதிந்துள்ளது. இக்கலை வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல. சங்க காலத்தில் நிகழ்ந்த சமூக வாழ்வியல், அரசியல், போர், வழிபாடு, காதல், வீரம் போன்ற அனுபவங்களை வெளிப்படுத்தும் ஒரு மக்கள் ஊடகமாக இக்கலை செயல்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**தெருக்கூத்து**

கிராமங்களில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடைபெறும்.

**நாடகக்கூத்து**

கதாப்பாத்திரங்கள், வசனங்கள், இசை, நடனம் ஆகியவை இணைந்து ஒரு முழுமையான நாடக வடிவத்தை உருவாக்கும்.

**புராணக்கூத்து**

இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டது.

**சமயக்கூத்து**

இந்துக்களின் சமய விழாக்களில் அதாவது கோயில்களில் நடைபெறும் ஆன்மீகக்கூத்து.

கூத்தில் வசனங்கள் இலக்கியத் தன்மை கொண்டதும், உணர்வுப் பூர்வமானதும் ஆகும். கதையின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் நடனங்கள் இடம்பெறும் கதாப்பாத்திரங்களின் அலங்காரங்கள் பார்வையாளர்களை ஈர்க்கும் நாட்டுப்புற இசை, தாளம், மிருதங்கம் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படும். கூத்துக் கலைஞர்கள் வசைக்கூத்து, பொதுவியல் கூத்து போன்ற வடிவங்களில் மூடநம்பிக்கைகள், சமூகச் சீர்கேடுகள், அதிகாரத்தின் தவறுகள் போன்ற நிகழ்வுகளை விமர்சித்து, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், சமூக மாற்றத்திற்கான கருவியாகவும் இருந்தது.

**திருக்குறளில் கூத்துக்கலை**

திருவள்ளுவர் மனித வாழ்க்கையை அறநெறி, உண்மை, இயல்பு ஆகிய அடிப்படைகளில் ஆராய்கிறார். திருக்குறளில் செல்வம் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராது. இடம்விட்டு இடம் செல்லும் என்பதற்கு நல்ல உவமையை கூத்துக்கலை மூலம் தருகிறார். கூத்தாடும் அவைக்கு மக்கள் கூத்துக்கள் நடைபெறும் காலம் வந்து கூடுவர். கூத்துக்கள் முடிந்த பின் அவரவர் இல்லங்களுக்குத் திரும்பிச் செல்வர். பின் கூத்தாடும் அவை வெறுமனே காலி இடமாக இருக்கும் அதுபோல, ஊழ் வினையின் காரணமாக ஒருவனிடம் சிலகாலம் செல்வம் தங்கும் பின் மங்கும் என்பதை உணர்த்த,

**“கூத்தாட் டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்**

**போக்கும் அது விளிந்தற்று”[1] (திருக்குறள், நிலையாமை, குறள்.332)**

என்ற குறளின்வழி வலியுறுத்தியுள்ளார். ஆக வள்ளுவர் காலத்தில் கூத்தாடுவதற்கென தனி இடம் இருந்ததென்பதும், கூத்து நடைபெறும் காலத்தே மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு கூடுவர் என்பது தெளிவாகிறது. மேலும் மற்றொரு குறளில் மரப்பாவை கூத்து என்பது மரத்தால் செய்த பாவைகளைக் கயிறு கொண்டு ஆட்டுவிக்கும் ஆட்டம் ஆகும். வள்ளுவர் காலத்தில் மரப்பாவைக் கூத்து நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பதை,

**”நான் அகத்தில்லா இயக்கம் மரப்பாவை**

**நாணால் உயிர் மருட்டி யற்று”[2]**

**(திருக்குறள் அதிகாரம் - கூடா ஒழுக்கம் குறள் எண்.276)**

என்ற குறட்பாவில் மக்களாகப் பிறந்த எவரும் நாணம் உடையவராக இருக்க வேண்டும். நாணத்தக்க பழிபாவங்களுக்கு நாணாதவர்கள் இவ்வுலகத்தில் நடமாடுவது கயிற்றால் கட்டி இயக்கப்படும் பாவைகள் ஆடுவதைப் போன்றது என்கிறார். எனவே மக்களுக்கு நல்ல வாழ்வியல் கருத்துக்களைக் கூறும் வள்ளுவரும் இக்கூத்தை உவமையாகக் கூறியதிலிருந்து அக்கூத்துக்கலை பெற்றிருந்த முக்கியத்துவம் புலனாகிறது. திருக்குறளில் மட்டுமல்லாது ஏலாதி, நாலடியார், ஐந்திணை எழுபது, நாண்மணிக்கணிக்கடிகை, பதினெண் கீழ்கணக்கு நூல்கள் மற்றும் சங்க இலக்கிய நூல்களிலும் கூத்து பற்றிய செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**கலைஞர்களின் உழைப்பும், உடல் பாதிப்புகளும்**

கூத்து என்பது ஒரு சமூகத்தின் நினைவுகளையும், வரலாற்றையும் உயிருடன் காக்கும் வாய்மொழி ஆவணமாகும். இந்தக் கலையை நிகழ்த்தும் கலைஞர்கள், கலைப் புகழுக்கு எதிராக வாழ்க்கை முழுவதும் வறுமை, புறக்கணிப்பு, உடல் உழைப்பு, நிரந்தர நிலையற்ற வாழ்வு போன்ற வலிகளைச் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

**"ஆடுவதைவிட அதற்காக ஊர் ஊராகப் போய் வருவதில் அலைச்சல் அதிகமாக இருந்த்து. நெடும் பயணங்கள் செய்ய வேண்டும். பேருந்து வசதி குறைவாக உள்ள ஊர்களில் ஆட்டம் ஆட வேண்டும் என்றால் பேருந்துக்காக மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டும். வேசம் கட்டி ஆடுவது மனசுக்குச் சுகமாக இருந்தாலும், அந்த அலைச்சல் அவனைச் சீக்கிரத்திலேயே சோர்வடைய வைத்துவிட்டது. அப்படி ஊர் ஊராக அலைவதும், தண்ணீர் மாற்றி மாற்றிக் குடிப்பதும் அவன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை"[3] (கவிப்பித்தன், ஜிகிட்டி, ப.121).**

கலைஞர்கள் நீண்ட நேரம் மேடையில் ஆட வேண்டிய கட்டாயம் உள்ளது. கனமான உடைகள், மரக்கட்டைகளை காலில் கட்டி ஆடுதல், இரவு முழுவதும் நிகழ்ச்சி நடத்துதல் போன்ற செயல்களால் உடல் ரீதியாக எண்ணற்ற வலிகளை அனுபவிக்கிறார்கள்.

1. கால்கள் மற்றும் முழங்கால் வலிகள்
2. இடுப்பு மற்றும் முதுகுவலி
3. தோள்பட்டை மற்றும் கழுத்துவலி
4. பாதம் மற்றும் பாதத்தள வலிகள்
5. உடல் சோர்வு மற்றும் தசைவலி

போன்றவை தினமும் அனுபவிக்கக் கூடிய வலிகளாக உள்ளது. இவை அல்லாமல் கலைஞர்களுக்கு வயதான பின்னர் முடக்குவாதம், முதுகு தண்டு சிக்கல்கள், நடை சிரமம் போன்ற உடல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இது போன்ற உடல் பாதிப்புகள் போதியஎ

மருத்துவப் பராமரிப்பு இல்லாமை மற்றும் பொருளாதார பின்னடைவு காரணமாக தீவிரமடைகிறது. கூத்து ஆடுவதினால் ஏற்படும் உடல் வலிகள், கலைஞர்களின் அர்பணிப்பின் விளைவாக உருவாகும் உழைப்புச் சுவடுகளாக ஆசிரியர் பதிவு செய்கிறார். மேலும் கூத்தாடும் போது மதிக்கப்படும் உடல் வலியுடன் நிற்கும்போது புறக்கணிக்கப்படுவதை நாவல்வழி அறியலாம்.

**கூத்துக்கலைஞர்களின் பொருளாதார நிலை**

இன்றைய கூத்துக் கலைஞர்களின் வாழ்க்கை நிலையான வருமானமற்றமாக உள்ளது. பெரும்பாலும் கூத்து நிகழ்ச்சிகள் கோவில் திருவிழாக்கள், கிராம விழாக்கள், அரசு அல்லது கல்வி நிறுவனங்களின் பண்பாட்டு நிகழ்ச்சிகள் என வரையறுக்கப்பட்ட காலகட்டங்களில் மட்டுமே நடைபெறுகின்றன. இதனால் ஆண்டு முழுவதும் வருமானம் கிடைப்பதில்லை. வறுமையுடன் வாழும் மனிதர்களாகவும், கூத்துக்குப் பிறகு கூலி கேட்கும் சமூக அதிகாரம் இல்லாதவர்களாகவும் உள்ளனர்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்**

**சென்றுபயன் சொன்ன பக்கமும்"[4] (தொல்காப்பியம், புறத்திணையியல்,நூ.30)**

என்ற வரிகள் கூத்தரைப் பற்றி தங்கள் பாட்டுக் கலைத்திறனைப் பாராட்டி வள்ளல் தரும் பரிசில் பொருள்களைப் பெற்று அவற்றை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்வர். அடுத்தவேளை உணவிற்கு வழி இல்லை என்றாலும் தகுதி இல்லாதவர்களைப் பற்றி பொய்யாக புனைந்து பாடமாட்டார்கள் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

திருவிழாக் காலங்களில் ஊர்ப் பொதுவில் நடிக்கப்படும் கூத்துக்கலை ஆண்டுதோறும் நிகழ்வதன்று. ஓர் ஆண்டில் நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு மட்டுமே நிகழ்த்தப்பெறும். கூத்துக் காலங்களில் பொருளை ஈட்டும் கலைஞர்கள் மீதமுள்ள நாட்களில் வறுமையில் வாடுவது இயல்பே. பொருநராற்றுப்படையில் விழா முடிந்து சிறிது காலம் வரை விழா நடந்த ஊர்களில் சோறிடுவது மரபாகும். அவ்வாறு சோறிடுவதையும் பெறுவதையும் இழுக்கெனக் கருதி வேற்றுப்புலத்தை கூத்தர்கள் நாடிச்செல்வர்.

**"அறாவு யான பரகன்றலைப் பேரூர்ச்**

**சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது**

**வேறுபுல முன்னிய விரகறி பொருந''[5]**

**(பொருநராற்றுப்படை பாடல்வரி 204-206)**

என்னும் பாடலடியில் இரந்து உண்ணும் பழக்கம், பண்பு கூத்துக் கலைஞர்களுக்கு இல்லை என்பதைப் புலப்படுத்துகிறது. கலைஞர்கள் தன்மானம் மிக்கவர்களாக இருந்துள்ளனர். தம்மை புறந்தள்ளாமலும், இழிவுபடுத்தாமலும் உள்ள வள்ளல்களை நாடிச் சென்றுள்ளனர் என்பதை இதன்மூலம் அறியலாம்.

**''இவர்கள் குழுவில் ஆடுகிறவர்கள் யாரும் ஆட்டத்தை நம்பி பிழைப்பு நடத்துகிறவர்கள் இல்லை. கங்காதரனைப் போல சிப்காட் வேலையோ, ஆடு, மாடு மேய்ப்பதோ என ஏதோ ஒரு வேலையைக் கைவசம் வைத்திருந்தனர்''[6] (கவிப்பித்தன், ஜிகிட்டி, பக்.108-109).**

பல கூத்துக் கலைஞர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக கூத்துடன் கூடவே விவசாயக்கூலி, கட்டிடக்கூலி போன்ற பணிகளில் ஈடுபட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறார்கள். கூத்து முழுநேரக் கலையாக இல்லாமல் துணைத் தொழிலாக மாறியுள்ளது. பொருளாதாரப் பின்னடைவு காரணமாக இளம் தலைமுறையினர் இக்கலையிலிருந்து விலகுகிறார்கள். இதனால் கூத்துக்கலை அழிவின் விளிம்பில் நிற்கிறது. இதிலிருந்து கூத்துக்கலை பாதுகாப்பை கலைஞர்களின் பொருளாதாரப் பாதுகாப்புடன் இணைக்கப்பட வேண்டிய தேவை ஏற்படுகிறது தெளிவாகிறது. மேடையில் போற்றப்படும் கலையாக இருந்தாலும் அந்தக் கலையைத் தாங்கி நிற்கும் கலைஞர்கள் வறுமையில் வாழ்வது ஒரு பெரும் முரண்பாடாகும். ஜிகிட்டி நாவலில் கலைஞர்களுக்கு கிடைக்கும் கூலி மிகக் குறைவானதாகவும், நிலையான வருமானமில்லாததாகவும் காட்டப்படுகிறது. புனிதக் கலை என்று கூறினாலும், அந்தக் கலையில் உழைக்கும் மனிதன் வறுமையின் விளிம்பில் வாழ்கிறான். இது பொருளாதார அடக்குமுறையாக ஆசிரியர் எடுத்துரைக்கிறார். நிலையான வருமானம், சமூகப் பாதுகாப்பு, அரசு ஆதரவு ஆகியவை உறுதி செய்யப்படாவிட்டால் கூத்துக்கலை ஒரு வாழும் பாரம்பரியமாகத் தொடர முடியாத நிலை ஏற்படும்.

**கலை மீதான பற்றும் அர்ப்பணிப்பும்**

கூத்துக் கலைஞர்கள் பொருளாதாரப் பற்றாக்குறை, சமூக அங்கீகாரம் குறைவு, நவீனப் பொழுதுபோக்குகளின் ஆதிக்கம் போன்ற பல தடைகளை எதிர்கொள்கிறார்கள். இருப்பினும், தங்கள் கலையை விட்டுவிடாமல் பிடித்துக் கொண்டு நிற்பதற்குக் காரணம் கலையின் மீதுள்ள ஆழமான பற்றும் தன்னலமற்ற அர்ப்பணிப்புமே ஆகும். பல கலைஞர்களை பிறந்த நாளிலிருந்தே கலைச் சூழலில் வளர்க்கப்படுகிறார்கள்.

***"தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும் கூத்தன்"[7]***

***(நாலடியார், பா.26)***

என்னும் வரிகள் ஒரு கூத்தன் எவ்வாறு பலவிதமான கூத்துச் செயல்களைச் செய்து காட்டுவானோ அதைப்போல உயிரும் உடலில் இருக்கும் வரை பலவிதமான சிந்தனைக் காட்பட்டு தொழில்கள் புரியும் என்று நாலடியார் கூறுகிறார்.

குடும்பப் பாரம்பரியமாகக் கற்றுக்கொள்ளப்படும் கலை அவர்களுக்குத் தொழிலாக மட்டுமல்லாமல் உயிரோடு கலந்த அடையாளமாக மாறுகிறது. கூத்து இல்லாத வாழ்க்கை வாழ்க்கையல்ல என்ற மனநிலை அவர்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. ஒரு நிகழ்ச்சிக்குப் பின்னால் குரல் பயிற்சி, நடனப்பயிற்சி, புராணக்கதைகளை மனப்பாடம் செய்தல் எனப் பெரும் உழைப்பு உள்ளது. ஆனால் இந்த உழைப்பிற்குரிய பொருளாதார மற்றும் சமூக மதிப்பு கிடைப்பதில்லை. இருந்தபோதிலும் இந்தக் கலை அழிந்துவிடக்கூடாது என்ற எண்ணமே தலைமுறை தாண்டிய அர்ப்பணிப்பாக உள்ளது.

***"மிலிட்டரிகாரு… போலீஸ்காரு… அதெல்லாம் உட்டுட்டா இங்க கூத்தாட வன்ட்டாங்… செரியான மென்டலு போல கீதே என இவன் காதுபடவே பேசிக் கொண்டனர் ஆட்டம் பார்க்க வந்த மக்கள்"[8] (கவிப்பித்தன், ஜிகிட்டி, ப.121).*** ஜிகிட்டி நாவலில் கங்காதரன் என்ற கூத்துக்கலைஞர் கலை மீது உள்ள பற்று காரணமாக மிலிட்டரி மற்றும் போலீஸ் வேலையை விடுத்து மீண்டும் கூத்தாடுகிறான். இதன் மூலம் கலையின் மீது கலைஞர்களுக்கு உள்ள பற்றையும் அர்ப்பணிப்பையும் அறிய முடிகிறது. நவீனமயத்தின் வேகத்தில் பல பாரம்பரியக் கலைகள் ஒதுக்கப்பட்டாலும், கூத்து இன்றுவரை உயிரோடு இருக்கிறதென்றால் அதற்குப் பின்னால் நிற்கும் கலைஞர்களின் அளவிட முடியாத அர்ப்பணிப்பே காரணம் என்று நாவலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

### கூத்துக் கலைஞர்களின் சமூக மரியாதையும், அடையாள நெருக்கடியும்

சமூகத்தின் நினைவுகள், புராணங்கள், ஒழுக்கக் கோட்பாடுகளை உயிர்ப்பிக்கும் கலைஞர்கள் மேடையில் மட்டும் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகிறார்கள். ஆனால் அதே சமூகத்திலேயே அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் மரியாதை இழப்பும், அடையாள நெருக்கடியும் ஒரு ஆழமான முரண்பாடாகத் தோன்றுகிறது. மேடையில் தெய்வங்களாகவும், வீரர்களாகவும் மாறுகிறார்கள். மக்கள் வணங்கும் பாத்திரங்களை உயிர்ப்பிப்பவர்கள் அவர்களே. ஆனால், மேடை இறங்கியவுடன் மீண்டும் சமூகத்தின் கீழ்த்தர நிலையில் நிறுத்தப்படுகிறார்கள். இந்த இரட்டை நிலை கலைஞர்களின் அடையாள நெருக்கடியின் அடிப்படையாக உள்ளது.

கிராமிய சமூகத்தில் கூத்து கலையாக மதிக்கப்படுகிறது. ஆனால் கலைஞர்கள் தொழிலாளி என்ற அடையாளத்துடன் வாழ்கிறார்கள். சில சமயங்களில் “பொழுது போக்கு மனிதர்” என்ற தாழ்த்தப்பட்ட பார்வை அவர்களின் சமூக மரியாதையை ஒரு வரம்புக்குள் அடக்குகின்றன. பல கலைஞர்கள் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட பின்னணியிலிருந்து வருவதால் மரியாதை மறுக்கப்படுகிறது. சமூக அங்கீகாரம் இல்லாத போதும், தங்கள் கலையை விட்டுவிட மறுப்பது கலைக்கு அவர்கள் தரும் மரியாதையைக் காட்டுகிறது. மதிக்கப்படாவிட்டாலும் “எங்கள் கலை மதிப்புள்ளது” என்ற நம்பிக்கை அவர்களின் உள்ளார்ந்த போராட்டமாக வெளிப்படுகிறது. கலையோடு சேர்த்து, கலைஞர்களின் மரியாதையும், அடையாளமும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

**நவீன மயமும் கூத்துக் கலைஞர்களும்**

நவீன மயம் மனித வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் வேகமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி, நகரமயமாதல், ஊடகப் பரவல் போன்றவை கலைகளின் இயல்பையும், கலைஞர்களின் வாழ்வியலையும் ஆழமாகத் தாக்கியுள்ளது. அந்த வகையில் தமிழர் பாரம்பரியக் கலைகளில் முக்கியமான கூத்துக்கலை மற்றும் அதனைத் தாங்கி நிற்கும் கலைஞர்கள் இன்று நவீன மயத்தின் தாக்கத்தால் பல சவால்களையும், மாற்றங்களையும் எதிர்கொள்கிறார்கள்.

சினிமா, தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் ஆகியவை பொழுதுபோக்கின் முதன்மை வடிவங்களாக மாறியதால், கூத்து போன்ற நேரடி மக்கள் கலைகளுக்கான பார்வையாளர்கள் குறைந்துள்ளனர். சில இடங்களில் கூத்து நவீன மேடை ஒலி-ஒளி தொழில்நுட்பங்களுடன் இணைக்கப்பட்டு மாற்றம் அடைந்துள்ளது. இது ஒரு புறம் பரவலுக்கு உதவினாலும், மறுபுறம் அதன் பாரம்பரியத் தன்மையை மங்கச் செய்கிறது.

நவீனமயமும் முழுமையான எதிர்மறை மட்டுமல்ல. டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் கூத்து ஆவணப்படுத்தப்பட்டு உலகலாவிய பார்வையாளர்களை அடைகிறது. பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் கூத்தை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்வதால் அதன் மதிப்பு உயருகிறது. சமூக அநீதிகள், சமகால அரசியல், பெண் விடுதலை போன்ற புதிய கருத்துகள் கூத்துக்குள் புகுந்து அதன் உயிர்ப்பிப்பைத் தொடரச் செய்கின்றன. நவீனமயமும், கூத்து கலைஞர்களும் முரண்பட்ட உறவாகத் தோன்றினாலும், சரியான ஆதரவு மற்றும் புரிதல் இருந்தால் இரண்டும் இணைந்து பயணிக்க முடியும். பாரம்பரியத்தின் அடையாளத்தைக் காக்கும் வகையில் நவீன வாய்ப்புகளைச் சீராகப் பயன்படுத்தினால் கூத்துக் கலையும், கலைஞர்களும் சமூகத்தில் உயிர்ப்புடன் நிலைத்திருக்க முடியும்.

**தலைக்கோலி பட்டம்**

தலைக்கோலி பட்டம் என்பது ஒருவருக்கு அளிக்கப்படும் உயர்ந்த மரியாதைப் பட்டம் அல்லது சிறப்பு கௌரவம் ஆகும். மாதவியின் நடனம் நாட்டிய நூற்களில் கூறும் விதிமுறைப்படி, குற்றம் குறைவில்லாமல் அமைந்திருந்தது. அந்நடனத்தைக் கண்ட மன்னன் தலைக்கோலி பட்டம் அளித்து மாதவி நடனத்தை சிறப்பித்தான் என்பதை,

***"நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்***

***காட்டினள் ஆதலின் காவல் வேந்தன்***

***இலைப் பூங்கோதை இயல்பினல் வழா அமைத்***

***தலைக்கோல் எய்தித் தலை அரங்கு ஏறி"[9] (சிலப்பதிகாரம், பா.160-163)***

என்ற வரிகள் மூலம் தலைக்கோலி என்ற பட்டம் சிறந்த ஆடல் நங்கைக்குரிய பட்டம் என்பது புலப்படுகிறது. அப்பட்டத்தைப் பெற்றதுடன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்னையும் மாதவி பரிசாகப் பெற்றிருக்கிறாள் என்று சிலம்பு காட்டுகிறது. சிறந்த ஆடல் நடனமங்கைக்கு பட்டமும் பரிசும் கொடுக்கும் பழக்கம் சிலப்பதிகார காலத்திலிருந்து இருப்பதை அறிய முடிகிறது. திருவிழாக்களில் கரகாட்டம் ஆடும் பெண்களுக்கு பணத்தை பரிசளிப்பது இன்றும் நடந்து வரும் வழக்கமாக உள்ளது.

**முடிவுரை**

கூத்து ஒரு உயர்ந்த கலை எனப் பேசப்படும் போதிலும் அந்தக் கலையைச் சுமக்கும் கலைஞர்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கமாகவே தொடர்கிறார்கள். கலை அவர்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பை அளிக்கவில்லை. உடல் உழைப்பும் மன வேதனையும் உடைய வாழ்க்கை அவர்களுடையது. கூத்துக் கலைஞர்கள் பற்றிய தமிழ் நாவல்கள், ஒரு பாரம்பரியக் கலை வடிவத்தின் வீழ்ச்சியை மட்டுமல்லாமல், அந்தக் கலைக்கு உயிரூட்டிய மனிதர்களின் வாழ்க்கை வேதனைகளையும் வெளிப்படுத்துகின்றன. இந்நாவல்கள் மூலம் கூத்துக் கலைஞர்கள் சமூகத்தின் விளிம்பிலிருந்து மையத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய தேவை வலியுறுத்தப்படுகிறது. தற்போதைய கூத்துப் பற்றிய நாவல்கள், கலை மனிதனைவிட உயர்ந்ததல்ல, மனிதனே கலையின் மையம் என்பதை வலியுறுத்துவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. திருக்குறள், நிலையாமை, குறள்.332.
2. திருக்குறள், கூடா ஒழுக்கம், குறள்.276.
3. கவிப்பித்தன், ஜிகிட்டி, ப.121.
4. தொல்காப்பியம், புறத்திணையியல் நூ.30.
5. பொருநராற்றுப்படை, பாடல்வரி.204-205.
6. கவிப்பித்தன், ஜிகிட்டி, பக்.108-109.
7. நாலடியார், பா.26.
8. கவிப்பித்தன், ஜிகிட்டி, ப.121.
9. சிலப்பதிகாரம், பா.160-163.

**துணைநூற்பட்டியல்**

1. கவிப்பித்தன்,ஜிகிட்டி, தடாகம் பதிப்பகம், 112 முதல் தளம், திருவள்ளூர் சாலை, திருவான்மியூர், முதல் பதிப்பு ஜூலை 2024, சென்னை - 600041.

2. அயோத்திதாச பண்டிதர், க., திருக்குறள் உரை விளக்கம், மெத்தா பதிப்பகம், 1848/8, ஆறாவது அவென்யூ, சென்னை - 600040.

3. புலியூர்கேசிகள் தெளிவுரை,சிலப்பதிகாரம், ராம் பிரசுரம், முதற்பதிப்பு, ஜூன் 2012.

4. தமிழ்ப்பிரியன்,நாலடியார் மூலமும் உரையும்,அருணா பதிப்பகம்,12, முதல் வீதி, வடக்கு ஜெகநாத் நகர்,வில்லிவாக்கம்,சென்னை - 600049.

5.வித்துவான் நாராயண வேலுப்பிள்ளை, மு., பத்துப்பாட்டு தெளிவுரை,முல்லை நிலையம், 9, பாரதி நகர், முதல்தெரு, முதற்பதிப்பு, 1994, தி நகர், சென்னை - 600017.

6.தொல்காப்பியம்,இளம்பூரணார் உரை , டயானா பிரிண்டர்ஸ், மூன்றாம் பதிப்பு, ஏப்ரல் 2007.

***References:***

1. Kavippithan, *Jigitti*, Thadagam Publications, 112, 1st Floor, Thiruvalluvar Road, Thiruvanmiyur; 1st Edition: July 2024; Chennai - 600041.

2. Ayothidasa Pandithar, K., *Thirukkural Urai Vilakkam* (Commentary and Explanation), Metha Publications,1848/8, 6th Avenue, Chennai - 600040.

3. Puliyur Kesigan (Commentary), *Silappathikaram*, Ram Prasuram; 1st Edition: June 2012.

4. Tamilpriyan, *Naladiyar: Text and Commentary*, Aruna Publications, 12, 1st Street,North Jagannath Nagar, Villivakkam, Chennai - 600049.

5. Vidwan Narayana Velupillai, M., *Pathuppattu: Lucid Commentary*, Mullai Nilayam, 9, Bharathi Nagar, 1st Street; 1st Edition: 1994; T. Nagar, Chennai - 600017.

6. *Tolkappiyam* (with Ilampooranar's Commentary), Diana Printers; 3rd Edition: April 2007.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com